**லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்வி**
**புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்**

# பதவி வெற்றிடங்கள்

லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தில் உள்ள பின்வரும் பதவிகளுக்காக பொருத்தமான தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## பணிப்பாளர் (01 வெற்றிடம்)

**கல்வித் தகைமை மற்றும் அனுபவம்**
**விண்ணப்பதாரர்கள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வியாபார முகாமைத்துவம், நிதி, வர்த்தகம், கணக்கியல், வியாபார நிர்வாகம் அல்லது பதவிக்கு இயைபான விடயத்துறையில் வேறு பட்டத்தைப் பெற்றிருத்தல்.
   அத்துடன்
   இயைபுடைய துறையில் பட்டப் பின்படிப்பு பட்டமொன்றைப் (Masters) பெற்றிருத்தல் / பதவிக்கு இயைபான விடயத்துறைக்குப் பொருத்தமான அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தின் இணை அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்.
   மற்றும்
   ஆரம்பப் பட்டத் தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அரசாங்கம் அல்லது நியதிச்சட்ட நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ மட்ட'' பதவிகளில் குறைந்தபட்சம் குறித்த துறையில் 15 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.
2. பதவிக்கு இயைபான விடயத்துறைக்குப் பொருத்தமான அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தின் முழுமையான அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்.
   மற்றும்
   அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிச்சட்ட நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ மட்ட'' பதவிகளில் குறைந்தபட்சம் குறித்த துறையில் 15 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**சம்பள அளவு:** HM 1-3 ரூபா (152,500 - 15x4,100 - 214,000) 2025-01-01ஆம் திகதியில் செலுத்தப்படும் தொகை ரூபா 113,556.00, 2026-01-01ஆம் திகதியில் செலுத்தப்படும் தொகை ரூபா 133,028.00, 2027-01-01 - ரூபா 152,500.00 (முகாமைத்துவ சேவை சுற்றுநிருப இல. 01/2025) EPF - 15%, ETF - 3%, வாழ்க்கைச் செலவுப் படி.

## உள்ளகக் கணக்காய்வாளர் II (01 வெற்றிடம்)

**கல்வித் தகைமை மற்றும் அனுபவம்**
**1.1 விண்ணப்பதாரர்கள் (பின்வரும் 1.2 அல்லது 1.3)**

1.2 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வியாபார முகாமைத்துவம், நிதி, வர்த்தகம், கணக்கியல் அல்லது பதவிக்கு இயைபான விடயத்துறையில் வேறு பட்டத்தைப் பெற்றிருத்தல் மற்றும் பட்டத் தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அரசாங்கம் அல்லது நியதிச்சட்ட நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் கணக்காய்வு வேலைகளுக்கு இயைபாக குறைந்தபட்சம் 01 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**அல்லது**

1.3 பதவிக்கு இயைபான விடயத்துறைக்குப் பொருத்தமான அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் மற்றும் தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் பதவிக்கு இயைபான குறித்த விடயத்துறையில் ஒரு (01) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**சம்பள அளவு:** MM 1-1 ரூபா (91,690 - 10x2,480 - 15x3,450 - 168,249) 2025-01-01ஆம் திகதியில் செலுத்தப்படும் தொகை ரூபா 71,730.00, 2026-01-01ஆம் திகதியில் செலுத்தப்படும் தொகை ரூபா 81,710.00, 2027-01-01 - ரூபா 91,690.00 (முகாமைத்துவ சேவை சுற்றுநிருப இல. 01/2025) EPF - 15%, ETF - 3%, வாழ்க்கைச் செலவுப் படி.

## கணக்காளர் III (01 வெற்றிடம்)

**கல்வித் தகைமை மற்றும் அனுபவம்**
**1.1 விண்ணப்பதாரர்கள் (பின்வரும் 1.2 அல்லது 1.3)**

1.2 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வியாபார முகாமைத்துவம், நிதி, வர்த்தகம், கணக்கியல் அல்லது பதவிக்கு இயைபான விடயத்துறையில் வேறு பட்டத்தைப் பெற்றிருத்தல் மற்றும் பட்டத் தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அரசாங்கம் அல்லது நியதிச்சட்ட நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் கணக்கியல் வேலைகளுக்கு இயைபாக குறைந்தபட்சம் 01 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**அல்லது**

1.3 பதவிக்கு இயைபான விடயத்துறைக்குப் பொருத்தமான அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் மற்றும் தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் பதவிக்கு இயைபான் குறித்த விடயத்துறையில் ஒரு (01) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**சம்பள அளவு:** MM 1-1 ரூபா (91,690 - 10x2,480 - 15x3,450 - 168,249) 2025-01-01ஆம் திகதியில் செலுத்தப்படும் தொகை ரூபா 71,730.00, 2026-01-01ஆம் திகதியில் செலுத்தப்படும் தொகை ரூபா 81,710.00, 2027-01-01 - ரூபா 91,690.00 (முகாமைத்துவ சேவை சுற்றுநிருப இல. 01/2025) EPF - 15%, ETF - 3%, வாழ்க்கைச் செலவுப் படி.

## தகவல் தொழில்நுட்ப முகாமையாளர் III (01 வெற்றிடம்)

**1. கல்வித் தகைமை மற்றும் அனுபவம்**
**1.1 விண்ணப்பதாரர்கள்**

1.2 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப பட்டம் அல்லது பதவிக்கு இயைபான துறையில் வேறு பட்டமொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அரசாங்கம் அல்லது நியதிச்சட்ட நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் தகவல் தொழில்நுட்பத் துறையில் குறைந்தபட்சம் 01 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**சம்பள அளவு:** MM 1-1 ரூபா (91,690 - 10x2,480 - 15x3,450 - 168,249) 2025-01-01ஆம் திகதியில் செலுத்தப்படும் தொகை ரூபா 71,730.00, 2026-01-01ஆம் திகதியில் செலுத்தப்படும் தொகை ரூபா 81,710.00, 2027-01-01 - ரூபா 91,690.00 (முகாமைத்துவ சேவை சுற்றுநிருப இல. 01/2025) EPF - 15%, ETF - 3%, வாழ்க்கைச் செலவுப் படி.

## ஏனையவை (அனைத்து விண்ணப்பதாரர்களும்)

- பணிப்பாளர் பதவிக்கு 35 வயதிற்குக் குறையாமலும் 55 வருடத்திற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.
- உள்ளகக் கணக்காய்வாளர் II, கணக்காளர் II, தகவல் தொழில்நுட்ப முகாமையாளர் II பதவிக்கு 22 வயதிற்குக் குறையாமலும் 45 வருடத்திற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.
- பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு பொருத்தமான உடல் மற்றும் உள தகுதியைக் கொண்டவராக இருக்க வேண்டும் என்பதுடன் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றக் கூடியவராக இருக்க வேண்டும். ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மொழிகள் தொடர்பான அறிவு மற்றும் ஆங்கிலம், தமிழ் மொழிகள் கதைக்கும் ஆற்றல் மேலதிக தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும்.
- கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.
- முழுப் பெயர், பிறந்த தினம், வயது, இனம், கல்வித் தகைமை, அனுபவம் மற்றும் வேறு குறிப்பிடக்கூடிய தகவல்களை உள்ளடக்கி உறவினரல்லாத இரு நபர்களின் பெயர் மற்றும் முகவரி சகிதம் விண்ணப்பப் படிவங்களை சான்றிதழ்களின் பிரதிகளுடன் சகிதம் தலைவர், லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம், 8ஆம் மாடி, சதொச பொதுச் செயலாளர் கட்டிடம், இல. 27, வொக்ஷோல் வீதி, கொழும்பு 02 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 2025-07-25ஆம் திகதிக்கு முன் கிடைக்கும் வகையில் அனுப்ப வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.
- விண்ணப்பங்களை குறும் பட்டியலிடும் உரிமை மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தினால் மேற்கொள்ளப்படும்.
- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் மற்றும் முழுமையற்ற விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

இது தொடர்பாக உங்களால் செலவு செய்யப்படும் பயணச் செலவுகள் மற்றும் ஏனைய செலவுகளுக்கு மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தினால் பிரதியீடு செய்யப்பட மாட்டாது.

**தலைவர்,**
**லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்,**
**8ஆம் மாடி, சதொச பொதுச் செயலாளர் கட்டிடம்,**
**இல. 27, வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.**
**தொலைபேசி: 0112685011, தொலைநகல்: 0112675524,**
**மின்னஞ்சல் முகவரி: mahapolafinance@gmail.com**